[2013 ஏப்ரல் 16

230—

வேளாண்மைக் கல்லூரி

*6786—**திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்பகோணம் தொகுதியில் புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில், தமிழ்நாட்டில் நெல் பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவில் சுமார் 25.32 விழுக்காடு பயிரிடப்பட்டு, மொத்த உற்பத்தியில் சுமார் 18.71 விழுக்காடு நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் பெரும்பங்கு வகிக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் 14 நெல் ஆராய்ச்சி நிலையங்களில் 100 ஆண்டுகள் பழமைவாய்ந்த, சுமார் 180 ஏக்கர் பரப்பளவு கொண்ட, சுமார் 20 தேர்ந்த வேளாண் விஞ்ஞானிகள் புதிய இரக நெல் கண்டுபிடிப்புகளான மிகவும் சிறப்பு வாய்ந்த* A.D.T. *36, 39, 43, 45, 50, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் சுமார் 50 நெல் இரகங்களையும், மேலும்,* A.D.T. *3,* A.D.T. *5 என்ற பயிர் மற்றும் உளுந்து இரகங்களையும் உள்ளடக்கியது என்பது பெருமைப்பட வேண்டியது. நான் பிறந்து வளர்ந்த சாக்கோட்டையில் அரசு விதைப் பண்ணை சுமார் 75 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது.*

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. அன்பழகன், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. க. அன்பழகன்: விவசாயிகளுக்குத் தேவைப்படும் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, மண்ணின் மைந்தன் என்ற உணர்வோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்பகோணத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருச்சி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டில் ஒரு வேளாண்மைக் கல்லூரியும், ஒரு மகளிர் தோட்டக்கலை கல்லூரியும், குமுளூரில் ஒரு வேளாண் பொறியியல் கல்லூரியும் இயங்கி வருகின்றன. இதனால் கும்பகோணத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இக்கல்லூரியில் சேர்ந்து படிக்க ஏதுவாக இருக்கும். எனவே, அந்தக் கல்லூரியில் கும்பகோணத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் சேர்ந்து படிக்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளைத் தேர்வு செய்து, விரும்பிப் படிக்கும் மாணவர்கள் மத்தியில் 'சோழ நாடு சோறுடைத்து' என்ற வைர வரிகளுக்கு இலக்கணமாகக் கொண்டு தொன்றுதொட்டு குறுவை, சம்பா மற்றும் கோடையிலும் முப்போகம் சாகுபடி செய்கின்ற டெல்டா மாவட்ட விவசாயிகளின் பிள்ளைகளுக்கு வேளாண்மைக் கல்வியை ஊக்குவிக்கும் வகையிலும், அதன் பிற்கால அவசியத்தை

உணர்த்தும் வகையிலும், நானும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலும், உலகப் புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி உயர்திரு எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் கும்பகோணத்தில் 1936 ஆம் ஆண்டு நேட்டிவ் உயர்நிலைப் பள்ளியிலும் மற்றும் சிறிய மலர் உயர்நிலைப் பள்ளியிலும் படித்தவர் என்பதையும், முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய பசுமைப் புரட்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வாழ்ந்தவர் திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் என்பதையும் கருத்தில் கொண்டு கும்பகோணத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைத்திட வேண்டும். மேலும், அரசு நிலமும் அங்கே இருக்கிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதியைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதி விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில், கும்பகோணம் தொகுதிக்கு அருகில் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் ஒரு வேளாண் அறிவியல் நிலையமும், தஞ்சாவூர் மாவட்டம், காட்டுத் தோட்டத்தில் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையமும், ஆடுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையமும், வேப்பங்குளத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையமும், பட்டுக்கோட்டையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஆராய்ச்சி நிலையங்களும், அறிவியல் நிலையங்களும் கும்பகோணம் தொகுதி விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப விவரங்களையும், பயிற்சிகளையும், பூச்சி நோய்க் கட்டுப்பாட்டு விவரங்களையும் வழங்கி விவசாயிகளுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. அதனால் விவசாயிகள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய மேற்கண்ட அறிவியல் நிலையங்களையும், ஆராய்ச்சி நிலையங்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.*

திரு. இ. சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்கூறும் நல்லுலகின் தாயாக, இந்தியத் திருநாட்டின் இணையற்ற சக்தியாக, உலக பெண் குலத்தின் ஒப்பற்ற வழிகாட்டியாக, வீர வரலாற்றின் வெற்றித் திருமகளாக, வாஞ்சை கொண்ட தொண்டனுக்கு வாழ்வு தரும் முகவரியாக, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும் (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சி தந்த கண்ணியத்தின் பேருருவம் அண்ணாவும், கர்ணனின் மறு பதிப்பாக காலத்தை வென்று வாழும் மக்கள் திலகமும், கலந்து உதித்த காவியமே, கழகத்தின் எங்கள் உயிர் ஓவியமே, காவேரியை மீட்டு எடுத்த கரிகால் பெருவளத்தானின் மறு உருவே, கலை உலகம், கனிம வளம், கன்னித் தமிழ் மதுரை இவற்றோடு சித்திரையையும் மீட்டு எடுத்த எங்கள் செந்தமிழ் குல தெய்வமே, நான் நித்தம் நித்தம் வணங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நிகரில்லா அன்னையே மாண்புமிகு அம்மா உங்கள் பொற்பாதம் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்பாசமுத்திரம் தொகுதியிலே வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தேவை இருப்பின் நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*